# 2022ல் முன்வைக்கப்பட்ட நெருக்கடி நிலைக் கொள்கைகளுக்கான இலங்கை அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு பற்றிய மதிப்பீடு

March 2023

© Verité Research

# உள்ளடக்க அட்டவணை


உள்ளடக்க அட்டவணை ........ 2

பின்னணி ........ 3

- செயல்படும் விதம் ........ 3
- செயல்படும் விதம் ........ 4
- வெளிப்படைத்தன்மை குறிகாட்டி ........ 4
- முன்னேற்றக் குறிகட்டி ........ 5

கண்டுபிடிப்புக்கள் ........ 6

- வெளிப்படைத்தன்மை ........ 6
- முன்னேற்றம் ........ 6

விரிவான கண்டுபிடிப்புகள் ........ 8

பொறுப்புத்துறத்தல் ........ 49

# பின்னணி

இலங்கையின் நீண்டகால பொருளாதார நெருக்கடி மற்றும் சமூக - அரசியல் கொந்தளிப்பு அதன் பிரஜைகளுக்கு கடுமையான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. நெருக்கடியை வரையறுக்கும் மூன்று பண்புகள்: அத்தியாவசிய மருந்துகள் மற்றும் மருந்துப்பொருட்களுக்கான கடுமையான பற்றாக்குறை, அதிகரிக்கும் உணவுப் பணவீக்கம் மற்றும் பல மாதங்களாக போக்குவரத்தை முற்றாக ஸ்தம்பிக்கச் செய்த எரிபொருள் பற்றாக்குறை.

இந்தச் சூழலில், 2022ன் முதல் அரையாண்டில் இந்த மூன்று பிரச்சனைகளையும் சமாளிக்க அரசாங்கம் முன்மொழிந்த கொள்கைகளை அது எவ்வளவு சிறப்பாக செயற்படுத்தியுள்ளது என்பதை வெரிட்டே ரிசேர்ச் மதிப்பிடுகிறது.

இதன் நோக்கங்கள்:

- அரசாங்கத் தீர்மானங்களின் வெளிப்படைத்தன்மையையும் அவை நிறைவேற்றப்படுவதையும் மேம்படுத்துதல்
- அரசாங்கத்தையும் அதிகாரத்துவத்தையும் பொறுப்புக்கூறச் செய்தல்

## செயல்படும் விதம்

இந்த மதிப்பீடு பாராளுமன்ற உறுப்பினர்களால் பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட 15 அமைச்சரவை முடிவுகளையும் முன்மொழிவுகளையும் கண்காணித்தது. பாராளுமன்ற ஹன்சார்ட்டுகள், அமைச்சரவைத் தீர்மானங்கள் தொடர்பான இணைய வெளியீடுகள் ஆகியவற்றில் பதிவுசெய்யப்பட்ட சுகாதாரம் மற்றும் மருத்துவம், உணவு மற்றும் விவசாயம், எரிபொருள் மற்றும் மின்சாரம் ஆகியவை தொடர்பான அனைத்து அமைச்சரவைத் தீர்மானங்களையும் முன்மொழிவுகளையும் அடையாளம் காண முக்கிய வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டன.

இவ்வாறு கண்காணிக்கப்படும் அனைத்து முடிவுகளும் இரண்டு குறிகாட்டிகளைப் பயன்படுத்தி மதிப்பிடப்பட்டன: வெளிப்படைத்தன்மை மற்றும் முன்னேற்றம்.

ஆன்லைனில் வெளியிடப்படும் தொடர்புடைய தகவல்களைக் கண்காணித்த போதும், 2016ம் ஆண்டின் 12ம் இல. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தும் முகவரகங்களிடம் தாக்கல் செய்யப்பட்ட தகவல் அறியும் உரிமைக் கோரிக்கைகளிலேயே தகவல்களைப் பெறுவதற்காக ஆய்வுக்குழு முக்கியமாகத் தங்கியிருந்தது. கோரிக்கைகள் நவம்பர் 4, 2022 தாக்கல் செய்யப்பட்டன. நெருக்கடி நிலை காரணமாக டிசம்பர் 16, 2022 வரை, அதாவது ஒன்றரை மாத காலம், முகவரகங்களிடம் இருந்து மதிப்பீட்டிற்கான தகவல்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இந்தக் காலப்பகுதிக்குப் பின்னர் பெறப்பட்ட எந்தத் தகவல்களும் மதிப்பீட்டில் கவனத்தில் கொள்ளப்படவில்லை.

## செயல்படும் விதம்

இந்த மதிப்பீடு பாராளுமன்ற உறுப்பினர்களால் பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட *15* அமைச்சரவை முடிவுகளையும் முன்மொழிவுகளையும் கண்காணித்தது. பாராளுமன்ற ஹன்சார்ட்டுகள், அமைச்சரவைத் தீர்மானங்கள் தொடர்பான இணைய வெளியீடுகள் ஆகியவற்றில் பதிவுசெய்யப்பட்ட சுகாதாரம் மற்றும் மருத்துவம், உணவு மற்றும் விவசாயம், எரிபொருள் மற்றும் மின்சாரம் ஆகியவை தொடர்பான அனைத்து அமைச்சரவைத் தீர்மானங்களையும் முன்மொழிவுகளையும் அடையாளம் காண முக்கிய வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டன.

இவ்வாறு கண்காணிக்கப்படும் அனைத்து முடிவுகளும் இரண்டு குறிகாட்டிகளைப் பயன்படுத்தி மதிப்பிடப்பட்டன: வெளிப்படைத்தன்மை மற்றும் முன்னேற்றம்.

ஆன்லைனில் வெளியிடப்படும் தொடர்புடைய தகவல்களைக் கண்காணித்த போதும், *2016*ம் ஆண்டின் *12*ம் இல. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தும் முகவரகங்களிடம் தாக்கல் செய்யப்பட்ட தகவல் அறியும் உரிமைக் கோரிக்கைகளிலேயே தகவல்களைப் பெறுவதற்காக ஆய்வுக்குழு முக்கியமாகத் தங்கியிருந்தது. கோரிக்கைகள் நவம்பர் *4, 2022* தாக்கல் செய்யப்பட்டன. நெருக்கடி நிலை காரணமாக டிசம்பர் *16, 2022* வரை, அதாவது ஒன்றரை மாத காலம், முகவரகங்களிடம் இருந்து மதிப்பீட்டிற்கான தகவல்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இந்தக் காலப்பகுதிக்குப் பின்னர் பெறப்பட்ட எந்தத் தகவல்களும் மதிப்பீட்டில் கவனத்தில் கொள்ளப்படவில்லை.

## வெளிப்படைத்தன்மை குறிகாட்டி

அரசாங்கம் செய்வதை எந்த அளவிற்குச் சொல்கிறது என்பதை இந்த காட்டி கண்காணிக்கிறது. ஒவ்வொரு தீர்மானமும்/முன்மொழிவும் செயற்படுத்தப்படுவது பற்றிய தகவலை அரசாங்கம் வெளிப்படுத்தும் அளவை இது மதிப்பிடுகிறது. சுருக்கமாகக் கூறுவதானால், இந்தக் குறிகாட்டி வெளிப்படைத்தன்மையைக் கண்காணிக்கிறது.

வெளிப்படைத்தன்மையானது மதிப்பீட்டுக் காலப்பகுதியில் கிடைக்கும் தகவல்களின் அடிப்படையில் அமைந்துள்ளதுடன் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகிறது:

| | |
|---|---|
| பகிரங்கப்படுத்தப்படவில்லை | மதிப்பீட்டுக் காலப்பகுதியில் முன்னேற்றத்தைத் தீர்மானிக்க எந்த தகவலும் கிடைக்கவில்லை மற்றும்/அல்லது சரியான நேரத்தில் தகவல் வழங்கப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| ⚠ | கட்டுப்படுத்தப்பட்டுள்ளது | மதிப்பீட்டுக் காலப்பகுதியில் முன்னேற்றத்தைத் தீர்மானிக்க போதுமான தகவல் கிடைக்கவில்லை மற்றும்/அல்லது சரியான நேரத்தில் தகவல் வழங்கப்படவில்லை. |
| 🔓 | பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது | முன்னேற்றம் பற்றிய தகவல்கள் முன்கூட்டியே வெளியிடப்பட்டுள்ளன அல்லது கோரிக்கையின் பேரில் வழங்கப்படுகின்றது மற்றும்/அல்லது சரியான நேரத்தில் வழங்கப்பட்டது. |

## முன்னேற்றக் குறிகட்டி

அரசாங்கம் சொல்வதை எந்த அளவிற்குச் செய்கிறது என்பதை இந்தக் காட்டி கண்காணிக்கிறது. காலக்கெடு மற்றும் நிறுவப்பட்ட மைல்கற்களின் அடிப்படையில் முன்மொழிவுகள் மற்றும் அமைச்சரவை முடிவுகளை செயல்படுத்துவதில் அரசாங்கம் அடைந்துள்ள முன்னேற்றத்தின் அளவை இது மதிப்பிடுகிறது.

முன்னேற்றம் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது:

| | | |
|---|---|---|
| ● | **வெளிப்படுத்தப்படவில்லை** | **எந்த தகவலும் கிடைக்கவில்லை அல்லது கிடைக்கக்கூடிய தகவல்கள் பயன்படுத்த முடியாதவை** |
| 👎 | **மோசம்** | செயற்படுத்துவதில் முன்னேற்றமானது இலக்கின் 25% க்கும் குறைவாக உள்ளது |
| ☆ | **பகுதியளவு** | செயற்படுத்துவதில் முன்னேற்றமானது இலக்கின் 25% -50% இடையே உள்ளது |
| ★ | **கணிசமானது** | செயற்படுத்துவதில் முன்னேற்றமானது இலக்கின் 50%-80% இடையே உள்ளது |

| | |
|---|---|
| **நிறைவேற்றப்பட்டது** | செயற்படுத்துவதில் முன்னேற்றமானது இலக்கின் *80%*க்கும் மேல் உள்ளது |


# கண்டுபிடிப்புக்கள்

## வெளிப்படைத்தன்மை

கண்காணிக்கப்பட்ட *15* முன்மொழிவுகள் ஒன்பது அரச முகவரகங்களின் மேற்பார்வையின் கீழ் வருவதுடன் எந்தவொரு முன்மொழிவின் முன்னேற்றம் தொடர்பிலும் ஆன்லைனில் முன்கூட்டியே தகவல்கள் வெளிப்படுத்தவில்லை.

சம்பந்தப்பட்ட அரச முகவரகங்களிடம் தகவல் அறியும் உரிமைக் கோரிக்கைகள் தாக்கல் செய்யப்பட்ட போதும், மூன்று *(20%)* பதில்கள் மட்டுமே பெறப்பட்டன. பெறப்பட்ட பதில்களில் ஒரேயோரு *(7%)* முகவரகம் வழங்கிய தகவல் மட்டுமே முன்னேற்றத்தை மதிப்பிடப் போதுமானதாக இருந்ததுடன் மற்ற இரண்டும் *(13%)* மதிப்பீட்டு நோக்கங்களுக்கு தொடர்புடையதாகவோ பயனுள்ளதாகவோ இருக்கவில்லை.

**விளக்கப்படம் *1:* கண்காணிக்கப்பட்ட *15* முன்மொழிவுகளின் "வெளிப்படைத்தன்மை" வகைப்படுத்தல்**





## முன்னேற்றம்

நடைமுறைப்படுத்தல் தொடர்பில் மதிப்பிடுவதற்குப் போதுமான தகவல் ஒரு முன்மொழிவு *(7%)* தொடர்பில் மாத்திரமே கிடைக்கப்பெற்றுள்ளது -

"கிடைக்கப்பெறாத நெல் விவசாயக் கடன்களைத் தள்ளுபடி செய்தல்".
வழங்கப்பட்ட தகவலின்படி, முன்மொழிவானது நிறைவேற்றப்பட்டது என தீர்மானிக்கப்படலாம் என ஆய்வுக் குழு முடிவெடுத்தது.

கண்காணிக்கப்பட்ட திட்டங்களில் 93% பகிரங்கப்படுத்தப்படாமலே இருக்கின்றன.

**விளக்கப்படம் 2: கண்காணிக்கப்பட்ட 15 முன்மொழிவுகளின் "முன்னேற்றம்" வகைப்படுத்தல்**



# விரிவான கண்டுபிடிப்புகள்

| முன்மொழிவு/ அமைச்சரவைத் தீர்மானம் | முன்மொழிவு பற்றிய விபரங்கள் | வெளிப்படைத்தன்மை | முன்னேற்றம் | RTI பற்றிய கருத்துக்கள் | அரச முகவரகம் |
|---|---|---|---|---|---|
| செமட விதுலிய (அனைவருக்கும் மின்சாரம்) | 19.01.2022 இலங்கைப் பாராளுமன்ற ஹன்சார்ட் பக்கம் 14 இல், கௌரவ. இசுரு தொடங்கொட மக்கள் அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்ள அத்தியாவசியமான மின்சாரத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். குறைந்த வருமானம் கொண்ட வீடுகளுக்கு மின்சார விநியோகத்தை விரிவுபடுத்தும் நோக்கில் "செமட விதுலிய" என்ற விசேட வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. | கட்டுப்படுத்தப்பட்டுள்ளது | வெளிப்படுத்தப்படவில்லை<br>கோரிக்கைக்கு கிடைத்த பதில் மூலம் பெறப்பட்ட தகவல்கள் முன்மொழிவுடன் தொடர்புடையதாக இல்லை என்பதால் முன்னேற்றத்தை மதிப்பிட முடியவில்லை. ("தெயட எலிய" என்ற வேறொரு திட்டத்திற்கான தகவலே | 04.11.2022 – RTI கோரிக்கை மின்சக்தி அமைச்சிடம் (MOP) தாக்கல் செய்யப்பட்டது.<br>15.11.2022 – கோரிக்கை தொடர்பில் பின்தொடர்வதற்காக அழைப்பு ஏற்படுத்தப்பட்டதுடன் அமைச்சு பதிலளிக்க 14 நாட்கள் அவகாசம் கேட்டது.<br>17.11.2022 - 10.11.2022 திகதியிடப்பட்ட ஒப்புகைக் கடிதம் கிடைத்தது. | மின்சக்தி அமைச்சு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | வழங்கப்பட்ட து) | 23.11.2022 - பின்தொடர்வதற்காக அழைப்பு ஏற்படுத்தப்பட்டபோது தகவல் ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்ட தாகத் தெரிவிக்கப்பட்டது.<br><br>25.11.2022. - தபால் மூலம் தகவல் பெறப்பட்டது | |
| எரிபொருள் விலை உயர்வால் பாதிக்கப்பட்ட மீன்பிடி மற்றும் போக்குவரத்து துறைகளுக்கான சிறப்பு நிவாரண திட்டங்கள் | 19.04.2022 இலங்கைப் பாராளுமன்றத்தின் ஹன்சார்ட் பக்கம் 81ல், கௌரவ. காஞ்சன விஜேசேகர மீன்பிடி மற்றும் போக்குவரத்து போன்ற துறைகளுக்கு விசேட நிவாரண திட்டங்களை நடைமுறைப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக குறிப்பிட்டிருந்தார். உலக சந்தையில் மசகு எண்ணையின் விலை மற்றும் டாலரின் விலையை கருத்தில் கொண்டு எரிபொருள் விலையை அதிகரிப்பது முக்கியம் என்று கூறிய அவர், எதிர்காலத்தில் | பகிரங்கப்படு த்தப்படவில் லை | வெளிப்படுத் தப்படவில் லை | 04.11.2022 – RTI கோரிக்கை மின்சக்தி அமைச்சிடம் தாக்கல் செய்யப்பட்டது.<br><br>15.11.2022 – கோரிக்கை தொடர்பில் பின்தொடர்வதற்காக அழைப்பு ஏற்படுத்தப்பட்ட போது RTI எரிசக்தி அமைச்சின் பெற்றோலியப் பிரிவுக்கு | மின்சக்தி அமைச்சு /வலுசக்தி அமைச்சு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மின்சாரத்தினை தடையின்றி வழங்குவதற்கும் மின்வெட்டை முடிவுக்கு கொண்டு வருவதற்குமான நடவடிக்கைகளை அரசாங்கம் செயற்படுத்த திட்டமிட்டால் மசகு எண்ணெய்க்கான கொள்வனவு அவசியம் என்றும் கூறினார். இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மசகு எண்ணெய் கொள்வனவுக்கான செலவினங்களை ஈடுசெய்வதற்காக எரிபொருள் விலையை அதிகரிக்க அரசாங்கம் கடமைப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். எவ்வாறாயினும், அமைச்சர் கூறியது போல் மீன்பிடி மற்றும் போக்குவரத்து போன்ற துறைகளுக்கு விசேட நிவாரண திட்டங்களை நடைமுறைப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டிருந்தது. | | | மாற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.<br><br>*23.11.2022* – எரிசக்தி அமைச்சின் பெற்றோலியப் பிரிவிடம் பின்தொடர்வதற்காக அழைப்பு மேற்கொள்ளப்பட்ட போது அவ்வாறான எந்தக் கோரிக்கையும் மின்சக்தி அமைச்சிடம் இருந்து கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.<br><br>*02.12.2022* - பின்தொடர்வதற்காக அழைப்பு மேற்கொள்ளப்பட்டது. எனினும் மாற்றப்பட்ட தகவல் அறியும் கோரிக்கை எரிசக்தி அமைச்சுக்கு | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது<br><br>தகவல் பெறப்படவில்லை | |
| புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலம் மின்சார உற்பத்தியில் தன்னிறைவை அடைதல் | *10.03.2022* இலங்கைப் பாராளுமன்றத்தின் ஹன்சார்டுகளின் பக்கம் *55*ல், கௌரவ. பவித்ராதேவி வன்னியாராச்சி, *2030*ம் ஆண்டளவில் இயன்றவரை புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களைப் பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை இலக்கை மின்சக்தி அமைச்சு முன்னெடுத்து வருவதாகவும், சூரிய வெப்பம் மற்றும் காற்றாலை மின் நிலையங்களைப் பயன்படுத்தி தேசிய கட்டமைப்பில் புதுப்பிக்கத்தக்க சக்தியை உள்ளடக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். மேலும் குறைந்தது *1,000* மெகாவாட்களை தேசிய | கட்டுப்படுத்தப்பட்டுள்ளது<br><br>பெறப்பட்ட தகவல் குறிப்பிடப்பட்ட முன்மொழிவுடன் தொடர்புடையதாக இல்லை என்பதால் அதை மதிப்பீட்டிற்குப் பயன்படுத்த முடியாது. | வெளிப்படுத்தப்படவில்லை | *04.11.2022 - RTI* கோரிக்கை மின்சார அமைச்சிடம் *(MOP)* தாக்கல் செய்யப்பட்டது.<br><br>*15.11.2022* - கோரிக்கை தொடர்பில் பின்தொடர்வதற்காக அழைப்பு ஏற்படுத்தப்பட்டதுடன் அமைச்சு பதிலளிக்க *14* நாட்கள் அவகாசம் கேட்டது.<br><br>*17.11.2022* - அமைச்சிடம் இருந்து *10.11.2022* திகதியிடப்பட்ட ஒப்புகைக் கடிதம் கிடைத்தது. | மின்சக்தி அமைச்சு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மின்கட்டமைப்பில் சேர்ப்பதற்கும், புதுப்பிக்கத்தக்க சக்தியுடன் இந்த நாட்டை தன்னிறைவு பெற்ற நாடாக மாற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். | | | *23.11.2022 -* பின்தொடர்வதற்காக அழைப்பு ஏற்படுத்தப்பட்டபோது தகவல் ஏற்கனவே தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.<br><br>*25.11.2022 -* வெரிட்டே தபால் மூலம் பதிலைப் பெற்றுக்கொண்டது. | |
| குறைந்த வருமானம் பெறும் பிரிவினர், தோட்டத்துறைத் தொழிலாளர்கள் மற்றும் மீனவர்களுக்கு மண்ணெண்ணெய் விநியோகிக்கும் திட்டம் | *18.05.2022* பாராளுமன்றத்தின் ஹன்சார்டுகளின் பக்கம் *10*ல், கௌரவ. காஞ்சன விஜேசேகர நாட்டில் நிலவும் மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டிற்கு தீர்வாக குறைந்த வருமானம் பெறும் பிரிவினர், தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் மீனவர்கள் மத்தியில் மண்ணெண்ணெய் விநியோகம் தொடர்பில் விசேட | பகிரங்கப்படுத்தப்படவில்லை | வெளிப்படுத்தப்படவில்லை | *04.11.2022 – RTI* கோரிக்கை மின்சக்தி அமைச்சிடம் தாக்கல் செய்யப்பட்டது.<br><br>*15.11.2022 –* கோரிக்கை தொடர்பில் பின்தொடர்வதற்காக அழைப்பு ஏற்படுத்தப்பட்ட போது *RTI* எரிசக்தி அமைச்சின் பெற்றோலியப் | மின்சக்தி அமைச்சு/ மின்சக்தி அமைச்சு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கவனம் செலுத்தும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முன்மொழிந்தார். எரிபொருள் நிலையங்களின் மத்தியஸ்தம் இன்றி இலக்குக்குரிய மக்களுக்கு நேரடியாக மண்ணெண்ணையை மானியமாக வழங்குவதே மேற்கூறிய வேலைத்திட்டமாகும். பேரூந்து உரிமையாளர்கள் போன்ற நபர்களால் மண்ணெண்ணை பதுக்கி வைத்திருப்பது குறித்து விசாரணை நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் வலியுறுத்தினார். | | | பிரிவுக்கு மாற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.<br><br>*23.11.2022* – எரிசக்தி அமைச்சின் பெற்றோலியப் பிரிவிடம் பின்தொடர்வதற்காக அழைப்பு மேற்கொள்ளப்பட்ட போது அவ்வாறான எந்தக் கோரிக்கையும் மின்சக்தி அமைச்சிடம் இருந்து கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.<br><br>*02.12.2022* - பின்தொடர்வதற்காக அழைப்பு மேற்கொள்ளப்பட்டது. எனினும் மாற்றப்பட்ட தகவல் அறியும் கோரிக்கை எரிசக்தி அமைச்சுக்கு | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது<br><br>தகவல் பெறப்படவில்லை | |
| *2021/22* பெரும்போகத்தில் நெல் கொள்வனவு | *2021/2022* பெரும்போகத்தில் அரசாங்கத்தின் நெல் கொள்வனவுத் திட்டம் விவசாயிகளின் அறுவடைக்கு நியாயமான விலையை வழங்குவதையும், விலையை நிலைப்படுத்தும் இருப்பினைப் பராமரிப்பதையும் நோக்கமாகக் கொண்டது. நெல் அறுவடையை நேரடியாக நெல் சந்தைப்படுத்தல் சபை மற்றும் மாவட்ட செயலாளர்கள்/அரசு முகவர்கள் சிறு மற்றும் நடுத்தர ஆலைகள் மூலம் மேற்கொள்ள வேண்டும். நெல் அறுவடையைக் கொள்வனவு செய்வதற்கு தேவையான *29,805* மில்லியன் ரூபா அரசாங்க வங்கிகள் மூலம் பெறப்பட உள்ளது. இதன்படி, விவசாய அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட | பகிரங்கப்படுத்தப்படவில்லை | வெளிப்படுத்தப்படவில்லை | *04.11.2022 –* நெல் சந்தைப்படுத்தல் சபையிடம் தகவலுக்கான உரிமைக் கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.<br><br>*15.11.2022 –* பின்தொடர்வதற்காக அழைப்பை ஏற்படுத்தியபோது கோரப்பட்ட தரவை சேகரித்து வருவதாகவும், ஒரு வாரத்தில் தொடர்புகொள்வதாகவும் நெல் சந்தைப்படுத்தல் சபை குறிப்பிட்டது. | நெல் சந்தைப்படுத்தல் சபை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | முன்மொழிவுகளை கவனத்தில் கொண்டு அமைச்சரவை பின்வருமாறு தீர்மானித்தது: *(i)* அரசாங்கத்தின் *2021/2022* ஆண்டு பெரும்போகத்தில் நெல் கொள்வனவு திட்டத்தின் கீழ் தனியார் துறையுடன் போட்டி விலையில் நெல் சந்தைப்படுத்தல் சபையினால் நெல்லை கொள்வனவு செய்தல் <br><br> *(ii) 2021/2022* பெரும்போகத்தில் நெல் அறுவடை குறைவினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் வருமான மட்டத்தைப் பாதுகாப்பதற்காக ஒரு கிலோவுக்கு *25/-* வீதம் நட்டஈடாகச் செலுத்துதல் | | | *22.11.2022 -* பின்தொடர்வதற்காக அழைப்பை ஏற்படுத்தியபோது இரண்டு நாட்களுக்குள் தகவல் கிடைக்கப்பெறும் என்றும் தகவலுக்கான உரிமைக் கோரிக்கை மேலதிக தகவலுக்காக விவசாய அமைச்சிற்கு *(MOA)* மாற்றப்பட வேண்டி ஏற்படலாம் என்றும் நெல் சந்தைப்படுத்தல் சபை *(PMB)* தெரிவித்தது. <br><br> *29.11.2022 -* பின்தொடர்வதற்காக அழைக்கப்பட்டதுடன் தகவல் தயாராக இருப்பதாகவும், *01.12.2022*க்குள் அனுப்பிவைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | *08.12.2022 -* பின்தொடர்வதற்காக அழைக்கப்பட்டதுடன் *09.12.2022* அன்று வெரிட்டே ரிசேர்ச்சிற்கு மின்னஞ்சல் மூலமாகவும் தபால் மூலமாகவும் தகவல் அனுப்பப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.<br><br>*13.12.2022 -* பின்தொடர்வதற்காக அழைக்கப்பட்டபோது, மூன்று தகவலுக்கான உரிமைக் கோரிக்கைகளில் ஒன்றிற்கு தகவல் வழங்கப்படும் என்றும், மீதமுள்ள இரண்டு கோரிக்கைகளுக்கான தகவல்கள் கமத்தொழில் அமைச்சினால் வழங்கப்பட வேண்டும் | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | என்றும் தெரிவிக்கப்பட்டது.<br><br>*15.12.2022 -* பின்தொடர்வதற்காக அழைக்கப்பட்டது, ஆனால் பதில் கிடைக்கவில்லை.<br><br>தகவல் கிடைக்கப் பெறவில்லை | |
| *2021/22* பெரும்போகத்தில் பசுமை விவசாய உள்ளீடுகள் பயன்பாட்டிற்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவை மேற்கொள்வதற்கான முறையியல் | *2021/2022* பெரும்போகத்தின் போது அறுவடை குறைவினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் வருமான மட்டத்தை வலுப்படுத்தும் நோக்கில், *01* கிலோ நெல்லுக்கு ரூபா *25/-* வீதம் நட்டஈடு வழங்குவதற்கு பொது திறைசேரியுடன் கலந்தாலோசித்து பொருத்தமான வழிமுறையொன்றை வகுக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | பகிரங்கப்படுத்தப்படவில்லை | வெளிப்படுத்தப்படவில்லை | *04.11.2022 –* நெல் சந்தைப்படுத்தல் சபையிடம் தகவலுக்கான உரிமைக் கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.<br><br>*15.11.2022 –* பின்தொடர்வதற்காக அழைப்பை ஏற்படுத்தியபோது கோரப்பட்ட தரவை சேகரித்து | நெல் சந்தைப்படுத்தல் சபை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இதன்படி, *05* ஏக்கர் பயிர்ச்செய்கைக்கு உரிய அளவுகோலின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட இழப்பீட்டை ஊக்குவிப்பாகவும், சிறிய மற்றும் நடுத்தர விவசாயிகளுக்கும், வாழ்வாதார அளவிலான சிறு விவசாயிகளுக்கும் வழங்குவதற்கும் ஒரு முறை வகுக்கப்பட்டது. அந்தவகையில், மேற்படி வழிமுறையை நடைமுறைப்படுத்துவதற்கும், அதற்குத் தேவையான நிதியை விவசாய அபிவிருத்தி திணைக்களத்திற்கு சேதன உரம் மற்றும் நெல் மற்றும் உற்பத்தியை ஊக்குவிக்கும் மற்றும் தானியங்கள், கரிம உணவுகள், காய்கறிகள், பழங்கள், மிளகாய்கள், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு சாகுபடியை ஊக்குவித்தல், விதை உற்பத்தி மற்றும் மேம்பட்ட தொழில்நுட்ப விவசாயத்தை ஒழுங்குபடுத்தும் இராஜாங்க | | | வருவதாகவும், ஒரு வாரத்தில் தொடர்புகொள்வதாகவும் நெல் சந்தைப்படுத்தல் சபை குறிப்பிட்டது.<br><br>*22.11.2022 -* பின்தொடர்வதற்காக அழைப்பை ஏற்படுத்தியபோது இரண்டு நாட்களுக்குள் தகவல் கிடைக்கப்பெறும் என்றும் தகவலுக்கான உரிமைக் *(RTI)* கோரிக்கை மேலதிக தகவலுக்காக விவசாய அமைச்சிற்கு *(MOA)* மாற்றப்பட வேண்டி ஏற்படலாம் என்றும் நெல் சந்தைப்படுத்தல் சபை *(PMB)* தெரிவித்தது.<br><br>*29.11.2022 -* பின்தொடர்வதற்காக அழைக்கப்பட்டதுடன் | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அமைச்சிலிருந்து வழங்குவதற்கும் கமத்தொழில் அமைச்சரினால் முன்மொழியப்பட்ட முன்மொழிவுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. | | | தகவல் தயாராக இருப்பதாகவும், *01.12.2022*க்குள் அனுப்பிவைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.<br><br>*08.12.2022 -* பின்தொடர்வதற்காக அழைக்கப்பட்டதுடன் *09.12.2022* அன்று வெரிட்டே ரிசேர்ச்சிற்கு மின்னஞ்சல் மூலமாகவும் தபால் மூலமாகவும் தகவல் அனுப்பப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.<br><br>*13.12.2022 -* பின்தொடர்வதற்காக அழைக்கப்பட்டபோது, மூன்று தகவலுக்கான உரிமைக் கோரிக்கைகளில் ஒன்றிற்கு தகவல் வழங்கப்படும் என்றும், மீதமுள்ள இரண்டு | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | கோரிக்கைகளுக்கான தகவல்கள் கமத்தொழில் அமைச்சினால் வழங்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.<br><br>*15.12.2022 -* பின்தொடர்வதற்காக அழைக்கப்பட்டது, ஆனால் பதில் கிடைக்கவில்லை.<br><br>தகவல் கிடைக்கப் பெறவில்லை | |
| *2022/23*<br><br>பெரும்போகத்தில் நெற் பயிர்ச்செய்கைக்கு பசளையை இறக்குமதி செய்து விநியோகித்தல் | *2022/23* பெரும்போகத்தில் *800,000* ஹெக்டெயர் நெல் பயிரிடும் எதிர்பார்ப்புடன், அதற்கான பசளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். *2022/23* பெரும்போகத்தில் நெற் பயிர்ச்செய்கைக்கு *150,000* மெட்ரிக் தொன் யூரியா, *45,000* மெட்ரிக் தொன் மியூரேட் ஆஃப் பொட்டாஷ் மற்றும் *36,000* | பகிரங்கப்படுத்தப்படவில்லை | வெளிப்படுத்தப்படவில்லை | *04.11.2022 –* நெல் சந்தைப்படுத்தல் சபையிடம் தகவலுக்கான உரிமைக் கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. | நெல் சந்தைப்படுத்தல் சபை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மெட்ரிக் தொன் டிரிபிள் சூப்பர் பொஸ்பேற்று தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டது.<br><br>இதன்படி, இலங்கை உரக் கம்பனி லிமிடெட் மற்றும் கொழும்பு கொமர்ஷல் பெர்டிலைசர்ஸ் லிமிடெட் ஆகியவற்றின் ஊடாக தேவையான பசளை இருப்புக்களை இறக்குமதி செய்து விவசாயிகளுக்கு விநியோகிக்க விவசாய அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. | | | *15.11.2022 –*<br>பின்தொடர்வதற்காக அழைப்பை ஏற்படுத்தியபோது கோரப்பட்ட தரவை சேகரித்து வருவதாகவும், ஒரு வாரத்தில் தொடர்புகொள்வதாகவும் நெல் சந்தைப்படுத்தல் சபை குறிப்பிட்டது.<br><br>*22.11.2022 -*<br>பின்தொடர்வதற்காக அழைப்பை ஏற்படுத்தியபோது இரண்டு நாட்களுக்குள் தகவல் கிடைக்கப்பெறும் என்றும் தகவலுக்கான உரிமைக் *(RTI)* கோரிக்கை மேலதிக தகவலுக்காக விவசாய அமைச்சிற்கு *(MOA)* மாற்றப்பட வேண்டி ஏற்படலாம் என்றும் | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | நெல் சந்தைப்படுத்தல் சபை *(PMB)* தெரிவித்தது.<br><br>*29.11.2022 -* பின்தொடர்வதற்காக அழைக்கப்பட்டதுடன் தகவல் தயாராக இருப்பதாகவும், *01.12.2022*க்குள் அனுப்பிவைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.<br><br>*08.12.2022 -* பின்தொடர்வதற்காக அழைக்கப்பட்டதுடன் *09.12.2022* அன்று வெரிட்டே ரிசேர்ச்சிற்கு மின்னஞ்சல் மூலமாகவும் தபால் மூலமாகவும் தகவல் அனுப்பப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.<br><br>*13.12.2022 -* பின்தொடர்வதற்காக | |

VR PUBLIC FINANCE .lk

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | அழைக்கப்பட்டபோது, மூன்று தகவலுக்கான உரிமைக் கோரிக்கைகளில் ஒன்றிற்கு தகவல் வழங்கப்படும் என்றும், மீதமுள்ள இரண்டு கோரிக்கைகளுக்கான தகவல்கள் கமத்தொழில் அமைச்சினால் வழங்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.<br><br>*15.12.2022 -* பின்தொடர்வதற்காக அழைக்கப்பட்டது, ஆனால் பதில் கிடைக்கவில்லை.<br><br>தகவல் கிடைக்கப் பெறவில்லை | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அரச துறைக்கு உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சிறிய அளவிலான திரவ ஊசி *(SLSVP)* மருந்தினைக் கொள்வனவு செய்தல் | அரசாங்கம் அண்ணளவாக *3,000* மில்லியன் ரூபாவினை *(*கிட்டத்தட்ட *15* மில்லியன் அமெரிக்க டொலர்கள்*)* சிறிய அளவிலான திரவ ஊசி மருந்தினைக் *(SLSVP)* கொள்வனவு செய்வதற்கு வருடாந்தம் செலவிடுகின்றது. வரையறுக்கப்பட்ட எம்/எஸ் கெலுன் லைஃப் சயன்ஸஸ் தனியார் நிறுவனத்திற்கு *(M/s Kelun Lifesciences (Pvt) Ltd)* நிறுவனத்திற்கு பல்லேகலைப் பகுதியில் வருடாந்தம் *50* மில்லியன் ஊசி மருந்துகளை உற்பத்தி செய்யும் திறன் கொண்ட தொழிற்சாலையை நிறுவுவதற்கு அரசாங்கத்தினால் அனுமதி வழங்கப்பட்டது. நாட்டில் *SLSVP* இனை உரிய தராதரங்களுடன் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட ஒரேயொரு நிறுவனமாகிய இக்கம்பனியானது, *2022* பெப்ரவரி முதல் தனது தயாரிப்புகளை வழங்கத் தயாராக உள்ளது. இதன்படி, | பகிரங்கப்படுத்தப்படவில்லை | வெளிப்படுத்தப்படவில்லை | *04.11.2022* – சுகாதார அமைச்சிடம் *(MOH)* தகவலுக்கான உரிமைக் கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டது.<br><br>*23.11.2022* - பின்தொடர்வதற்காக அழைக்கப்பட்டது, தகவலுக்கான உரிமைக் *(RTI)* கோரிக்கையானது *11.11.2022* அன்று மேலதிக செயலாளர் - நிருவாகம் *II* க்கு உள்வாரியாக *(mh/pd/01/Gen.Misc/2022/volume1)* உசாத்துணைக் குறியீட்டுடன் மாற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.<br><br>மேலதிக செயலாளர் தகவலை வரைவு செய்ய மேலதிக அவகாசம் கோரினார். | சுகாதார அமைச்சு / ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | சுகாதார அமைச்சரால் முன்மொழியப்பட்ட மேற்கூறிய நிறுவனத்திற்கும் இலங்கை அரச மருந்துப் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்திற்கும் *(SPMC)* இடையில் மேற்கொள்ளப்படும் அரசாங்கத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக *SLSVP* ஐப் பெற்றுக்கொள்வதற்கான ஒப்பந்தம் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டது. | | | *29.11.2022* - பின்தொடர அழைக்கப்பட்டது, ஆனால் பதில் கிடைக்கவில்லை.<br><br>*02.12.2022* - பின்தொடர்வதற்காக அழைக்கப்பட்டது, கோரிக்கையானது ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சின் மேலதிக செயலாளருக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும், இடமாற்றக் கடிதம் வெரிட்டேக்கு அனுப்பப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.<br><br>*02.12.2022* – வாட்ஸ்அப் மூலமாக மாற்றல் கடிதத்தின் பிரதி கிடைத்தது. | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | *09.12.2022.* - தபால் மூலம் மாற்றல் கடிதத்தின் வன்பிரதி கிடைத்தது.<br><br>மேற்கொண்டு கடிதம் எதுவும் கிடைக்கவில்லை.<br><br>தகவல் கிடைக்கப்பெறவில்லை | |
| சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திற்கு மசகு எண்ணெய் வழங்குதல் | சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திற்குத் தேவையான மசகு எண்ணெயை *2022* யூலை மாதம் வரை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டிருந்தன, அன்றைய திகதிக்கு அப்பால் தேவைப்படும் மசகு எண்ணெயை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க | பகிரங்கப்படுத்தப்படவில்லை | வெளிப்படுத்தப்படவில்லை | *04.11.2022* – வலுசக்தி அமைச்சிடம் *(MOE)* தகவலுக்கான உரிமைக் *(RTI)* கோரிக்கை<br><br>தாக்கல் செய்யப்பட்டது. | வலுசக்தி அமைச்சு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வேண்டியிருந்தது. சைப்ரஸின் டெர்ரா நேவிஸ் குழுமம் சபுகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையத்திற்கு மசகு எண்ணெய் வழங்குவதற்கு கோரப்படாத முன்மொழிவை அழைத்தது. 180 நாட்களுக்கு நீட்டிக்கப்பட்ட கடன் அடிப்படையில் மசகு எண்ணெய் வழங்குவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவு அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட சிறப்பு நிலையான பெறுகைக் குழுவால் மதிப்பிடப்பட்டதுடன் மற்றும் 450,000Bbls ஆரம்ப இறக்குமதியைப் பெற பரிந்துரை செய்யப்பட்டது. இதன்படி, மேற்படி குழுவின் பரிந்துரையின்படி மசகு எண்ணெய் விநியோகம் தொடர்பாக வலுச் சக்தி அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. | | | 22.11.2022 மற்றும் 23.11.2022 - பின்தொடர்வதற்காக அழைக்கப்பட்டு, அமைச்சில் உள்ள மற்றொரு நபருக்கு அனுப்பப்பட்டது. எனினும் அவர்களின் தொடர்பு விவரங்கள் வழங்கப்படவில்லை.<br><br>05.12.2022 - பின்தொடர்வதற்காக அழைக்கப்பட்டபோது, தேவையான தகவலை ஒரு வாரத்திற்கு முன்பே வெரிட்டே ரிசேர்ச்சிற்கு அனுப்பியதாகத் தெரிவிக்கப்பட்டது, இருப்பினும் தகவல் தபால் மூலம் பெறப்படவில்லை. மின்னஞ்சல்/தொலைநகல் மூலம் பிரதியைக் கோரியபோது இதற்காக மேலதிகமாக இரண்டு நாட்கள் | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | அவகாசம் கோரப்பட்டது.<br><br>*15.12.2022 –* வலுசக்தி அமைச்சிற்கு சென்றபோதும் தகவல் அதிகாரியைச் சந்திக்க முடியவில்லை<br><br>தகவல் கிடைக்கப் பெறவில்லை. | |
| மகாவலி நக்கிள்ஸ் சேதன விவசாய வலயத்துக்கான சேதனப் பசளை தயாரிக்கும் திடலை நிர்மாணித்தல் | மொரகஹகந்த, களுகங்கை மகாவலி "எஃப்" வலயம், மகாவலி அதிகார சபைச் சட்டத்தின் விதிகளுக்கு அமைவாக, வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக சேதன விவசாயப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படும் நிலையான அபிவிருத்தி வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டது. நச்சுத்தன்மையற்ற சேதன உள்ளீடுகளைப் பயன்படுத்தி விவசாய பயிர்களை உற்பத்தி | பகிரங்கப்படுத்தப்படவில்லை | வெளிப்படுத்தப்படவில்லை | *04.11.2022 -* இலங்கை மகாவலி அதிகாரசபையிடம் *(MASL)* தகவலுக்கான உரிமைக் கோரிக்கை<br><br>தாக்கல் செய்யப்பட்டது.<br><br>*15.11.2022 -* கோரப்பட்ட தகவல்கள் இலங்கை மகாவலி அதிகாரசபையிடம் இல்லை என்பதால் | இலங்கை மகாவலி அதிகாரசபை/ நீர்ப்பாசன அமைச்சு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | செய்வதன் மூலம் விவசாய சமூகத்தின் வருமானத்தை அதிகரிக்கவும், இயற்கை வேளாண்மை குறித்த ஆழ்ந்த அறிவைக் கொண்ட விவசாயிகளின் பங்களிப்புடன் தேசிய இயற்கை விவசாய பயிர்களின் உற்பத்தி தொடர்பான இலக்குகளை அடையவும் எதிர்பார்க்கப்படுகிறது. வெல்லவாய மற்றும் குருவெல மகாவலி வலயங்களில் நீண்ட கால பயிர்ச் செய்கைக்கு தேவையான சேதனப் பசளைகளை அதே வலயங்களுக்குள்ளேயே உற்பத்தி செய்யும் நோக்கில் தேவையான ஆய்வுகூட வசதிகளுடன் கூடிய இரண்டு சேதனப் பசளை உற்பத்தி கூடங்களை நிர்மாணிக்க திட்டமிடப்பட்டது. இத்திட்டத்தின் முதற்கட்டமாக வெல்லவாய சேதனப் பசளை உற்பத்தி திடலை நிறுவுவதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன், குறித்த திடலில் இருந்து | | | தகவலுக்கான உரிமைக் கோரிக்கை இலங்கை மகாவலி அதிகாரசபையால் நீர்ப்பாசன அமைச்சிற்கு மாற்றப்பட்டதாகக் குறிப்பிடும் கடிதம் கிடைத்தது.<br><br>*22.11.2022* – நீர்ப்பாசன அமைச்சுடன் தொடர்புகொண்டபோது, கோரிக்கை கமத்தொழில் அமைச்சிற்கு மாற்றப்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.<br><br>*24.11.2022* – பின்தொடர்வதற்காக அழைப்பை ஏற்படுத்தியபோது எந்தவொரு | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வருடாந்தம் 2000 மெட்ரிக் தொன் பசளையை உற்பத்தி செய்ய முடியும் என கணிக்கப்பட்டது.<br><br>இதன்படி, மேற்படி சேதனப் பசளை திடலை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்தை மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்திற்கு நேரடி ஒப்பந்தமாக வழங்குவதற்கு நீர்ப்பாசன அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. | | | தகவலையும் வழங்கவில்லை.<br><br>29.11.2022 - பலமுறை அழைத்தும் பதில் கிடைக்கவில்லை.<br><br>08.12.2022 - மீண்டும் பலமுறை அழைக்க முயற்சித்தும் பதில் எதுவும் கிடைக்கவில்லை<br><br>09.12.2022 - RTI கோரிக்கையை மேலதிக செயலாளருக்கு (நீர்ப்பாசனம் மற்றும் நீர்வள முகாமைத்துவம்) உள்வாரியாக மாற்றுவது குறித்து 04.11.2022 திகதியிடப்பட்ட கடிதம் நீர்ப்பாசன அமைச்சிடமிருந்து பெறப்பட்டது. வேறு | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | எந்தக் கடிதப் பரிமாற்றமும் நடைபெறவில்லை.<br><br>தகவல் பெறப்படவில்லை. | |
| அரச காணிகளின் தரிசு நிலங்களை விவசாய நோக்கங்களுக்காகப் பயன்படுத்துகின்ற திட்டத்தின் மூலம் உணவுப் பற்றாக்குறையைச் சமாளிக்க மாவட்ட மட்டத்திலான குழுக்களை நியமித்தல். | இலங்கைப் பாராளுமன்றத்தின் 19.05.2022 திகதியிடப்பட்ட ஹன்சார்டின் பக்கம் 17 இல், கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்கள் உணவுத் தட்டுப்பாட்டைப் போக்க மாவட்ட மட்டக் குழுக்களை நியமிக்க முன்மொழிந்தார். குறிப்பாக கொழும்பு மாவட்டத்தில் அரசாங்கத்தின் வசம் உள்ள வெற்று காணிகளை விவசாய தேவைகளுக்காக பயன்படுத்துவதற்கு கொழும்பு மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் அவர் ஆதரவை கோரினார். விவசாய | பகிரங்கப்படுத்தப்படவில்லை<br><br>தகவல் 26.12.2022 அன்று கிடைக்கப் பெற்றது. (RTI 04.11.2022 தாக்கல் செய்யப்பட்டது) எனவே 14 நாட்களுக்குப் பிறகு தகவல் கிடைக்கப்பெற்றதால்<br><br>(மற்றும் 21 நாட்கள்) - தாமதமான | வெளியிடப்படவில்லை | 04.11.2022 - RTI கோரிக்கை விவசாயத் திணைக்களத்திடம் (DOA) தாக்கல் செய்யப்பட்டது.<br><br>15.11.2022 - பின்தொடர்வதற்காக அழைக்கப்பட்ட போது திணைக்களத்திடம் கோரப்பட்ட தகவல்கள் இல்லை என்பதால் கோரிக்கை கமத்தொழில் அமைச்சிற்கு மாற்றப்படும் என்று தெரிவிக்கப்பட்டது, | விவசாயத் திணைக்களம் / கமத்தொழில் அமைச்சு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அமைச்சு இத்திட்டத்துக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டது. அவிசாவளை மற்றும் ஹோமாகம பிரதேசங்களின் ஒரு பகுதி தவிர கொழும்பில் உள்ள ஏனைய அனைத்து பகுதிகளிலும் மேற்படி திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என பிரதமர் குறிப்பிட்டுள்ளார். முன்மொழியப்பட்ட வேலைத்திட்டம் தொடர்பான இறுதி முடிவு தொடர்புடைய பாராளுமன்ற உறுப்பினர்களுடனான கலந்துரையாடலின் பிறகான வாரத்தில் எடுக்கப்படும். | பதிலாகக் கருதப்பட்டது. | | *22.11.2022 - MOA* க்கு அழைத்தபோது, அவர்கள் மாற்றப்பட்ட கோரிக்கை கிடைக்கப்பெற்றதாகவும், தொடர்புடைய மேலதிக செயலாளர் தகவலை சேகரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார் எனவும் அறிவிக்கப்பட்டது.<br><br>*25.11.2022* - உள்ளக மாற்றக் கடிதத்தின் பிரதியை வெரிட்டே பெற்றுக்கொண்டது.<br><br>*29.11.2022 –* பின்தொடர்வதற்காக அழைக்கப்பட்டபோது, கோரப்பட்ட தகவலை வழங்க இன்னும் ஒரு வாரம் தேவை எனத் தெரிவிக்கப்பட்டது.<br><br>*05.12.2022* பின்தொடர்வதற்காக | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | அழைக்கப்பட்டபோது, நியமிக்கப்பட்ட அதிகாரிகளில் இருவர் தகவல்களைத் தயாரித்து முடித்துவிட்டதாகவும், அவர்கள் *09.12.2022* திகதிக்குள் நான்கு *RTI* களுக்கும் பதில்களை அனுப்புவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.<br><br>*09.12.2022 – MOA* ஐ அழைக்க முயற்சித்தபோதும் பதில் கிடைக்கவில்லை.<br><br>*13.12.2022 -* பின்தொடர்வதற்காக அழைத்தபோது, மேலும் ஒரு நியமிக்கப்பட்ட அதிகாரியின் தகவல் வரைவுக்காக காத்திருப்பதாக தெரிவிக்கப்பட்டது, | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | மேலும் நான்கு *RTI* கோரிக்கைகளுக்கும் பதில்களை *14.12.2022*க்குள் தபால் மற்றும் மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைப்பதாகத் அறிவிக்கப்பட்டது.<br><br>*14.12.2022* - பின்தொடர்வதற்காக பலமுறை அழைப்புக்களை மேற்கொண்டபோதும் கிடைக்கப்பெறவில்லை. அதன் பின்னர் நாங்கள் தொடர்பு கொள்வதை நிறுத்தினோம்.<br><br>*26.12.2022* - தபால் மூலம் தகவல்கள் கிடைக்கப்பெற்றன. | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| "இணைந்து பயிரிடுவோம் - நாட்டை வெற்றி பெறச்செய்வோம் " - பயிர் உற்பத்திக்கான தேசிய இயக்கம் | நாட்டில் நிலவி வரும் உணவுப் பாதுகாப்பு நெருக்கடிக்கு விரைவான தீர்வாக, விவசாய அமைச்சின் அனுசரணையில், பொதுநிர்வாகம் உள்நாட்டலுவல்கள் அமைச்சு உட்பட மாகாண சபைகள் உள்ளூராட்சி, மற்றும் புத்தசாசன, மத மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சுகளுடன் இணைந்து நாடளாவிய ரீதியில் துரித உணவு உற்பத்தி இயக்கத்தை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டது. விவசாயத் திணைக்களம் மற்றும் மாகாண விவசாயத் திணைக்களங்களின் தொழில்நுட்ப பங்களிப்புடன் விவசாய அமைச்சின் ஒருங்கிணைப்பின் கீழ் முழு வேலைத்திட்டமும் மேற்கொள்ளப்பட இருந்தது. இதன் பிரகாரம், பொதுநிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் மற்றும் விவசாய | பகிரங்கப்படுத்தப்படவில்லை<br><br>தகவல் *26.12.2022* ஆம் திகதி கிடைக்கப்பெற்றது. இது *RTI* பதில்களை ஏற்றுக்கொள்வதற்கான முடிவுத் திகதிக்கு பின்னராகும். | வெளியிடப்படவில்லை | *04.11.2022 - RTI* கோரிக்கை விவசாயத் திணைக்களத்திடம் *(DOA)* தாக்கல் செய்யப்பட்டது.<br><br>*15.11.2022 -* பின்தொடர்வதற்காக அழைக்கப்பட்ட போது திணைக்களத்திடம் கோரப்பட்ட தகவல்கள் இல்லை என்பதால் கோரிக்கை கமத்தொழில் அமைச்சிற்கு மாற்றப்படும் என்று தெரிவிக்கப்பட்டது,<br><br>*22.11.2022 - MOA* க்கு அழைத்தபோது, அவர்கள் மாற்றப்பட்ட கோரிக்கை கிடைக்கப்பெற்றதாகவும், தொடர்புடைய மேலதிக செயலாளர் தகவலை சேகரிக்கும் பணியில் | விவசாயத் திணைக்களம் / கமத்தொழில் அமைச்சு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அமைச்சு மற்றும் புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு ஆகியன இணைந்து முன்வைத்த இணைந்து பயிரிடுவோம் - நாட்டை வெற்றி பெறச்செய்வோம் ' திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. பௌத்த விகாரைகள் மற்றும் வழிபாட்டுத் தலங்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள், பள்ளிவாசல்கள் மற்றும் இந்து கோவில்களுக்குச் சொந்தமான சுமார் *250,000* ஹெக்டேர் நிலங்களை இதற்காக பயன்படுத்துகின்றது. | | | ஈடுபட்டுள்ளார் எனவும் அறிவிக்கப்பட்டது.<br><br>*25.11.2022* - உள்ளக மாற்றக் கடிதத்தின் பிரதியை வெரிட்டே பெற்றுக்கொண்டது.<br><br>*29.11.2022* – பின்தொடர்வதற்காக அழைக்கப்பட்டபோது, கோரப்பட்ட தகவலை வழங்க இன்னும் ஒரு வாரம் தேவை எனத் தெரிவிக்கப்பட்டது.<br><br>*05.12.2022* பின்தொடர்வதற்காக அழைக்கப்பட்டபோது, நியமிக்கப்பட்ட அதிகாரிகளில் இருவர் தகவல்களைத் தயாரித்து முடித்துவிட்டதாகவும், அவர்கள் *09.12.2022* திகதிக்குள் நான்கு *RTI* களுக்கும் பதில்களை | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | அனுப்புவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.<br><br>*09.12.2022 – MOA* ஐ அழைக்க முயற்சித்தபோதும் பதில் கிடைக்கவில்லை.<br><br>*13.12.2022 -* பின்தொடர்வதற்காக அழைத்தபோது, மேலும் ஒரு நியமிக்கப்பட்ட அதிகாரியின் தகவல் வரைவுக்காக காத்திருப்பதாக தெரிவிக்கப்பட்டது, மேலும் நான்கு *RTI* கோரிக்கைகளுக்கும் பதில்களை *14.12.2022*க்குள் தபால் மற்றும் மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைப்பதாகத் அறிவிக்கப்பட்டது. | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | *14.12.2022 -* பின்தொடர்வதற்காக பலமுறை அழைப்புக்களை மேற்கொண்டபோதும் கிடைக்கப்பெறவில்லை. அதன் பின்னர் நாங்கள் தொடர்பு கொள்வதை நிறுத்தினோம்.<br><br>*26.12.2022 -* தபால் மூலம் தகவல்கள் கிடைக்கப்பெற்றன. | |
| விவசாய விதைகளை வீடுகளுக்கு விநியோகித்தல் | *19.01.2022* ஆம் திகதியிடப்பட்ட இலங்கைப் பாராளுமன்ற ஹன்சார்டின் பக்கம் *44* இல், தங்கள் வீட்டுத் தோட்டங்களில் பழங்கள் மற்றும் மரக்கறிகளை நடுவதை ஊக்குவிக்கும் வகையில் *20* மில்லியன் வீட்டு அலகுகளுக்கு விவசாய விதைகளை விநியோகிக்க வரவுசெலவு திட்டத்தில் ரூ.*85,000* மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதாக கௌரவ | பகிரங்கப்படுத்தப்படவில்லை<br><br>அமைச்சுக்களிலிருந்து தகவல் கிடைக்கப் பெறுவதற்கான காலக்கெடுவிற்குப் பின்னரே | வெளியிடப்படவில்லை | *04.11.2022 - RTI* கோரிக்கை விவசாயத் திணைக்களத்திடம் *(DOA)* தாக்கல் செய்யப்பட்டது.<br><br>*15.11.2022 -* பின்தொடர்வதற்காக அழைக்கப்பட்ட போது திணைக்களத்திடம் கோரப்பட்ட தகவல்கள் இல்லை என்பதால் | விவசாயத் திணைக்களம் / கமத்தொழில் அமைச்சு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | குணதிலக்க ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். | தகவல் வழங்கப்பட்டது. | | கோரிக்கை கமத்தொழில் அமைச்சிற்கு மாற்றப்படும் என்று தெரிவிக்கப்பட்டது,<br><br>*22.11.2022 - MOA* க்கு அழைத்தபோது, அவர்கள் மாற்றப்பட்ட கோரிக்கை கிடைக்கப்பெற்றதாகவும், தொடர்புடைய மேலதிக செயலாளர் தகவலை சேகரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார் எனவும் அறிவிக்கப்பட்டது.<br><br>*25.11.2022 -* உள்ளக மாற்றக் கடிதத்தின் பிரதியை வெரிட்டே பெற்றுக்கொண்டது.<br><br>*29.11.2022 –* பின்தொடர்வதற்காக அழைக்கப்பட்டபோது, | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | கோரப்பட்ட தகவலை வழங்க இன்னும் ஒரு வாரம் தேவை எனத் தெரிவிக்கப்பட்டது.<br><br>*05.12.2022* பின்தொடர்வதற்காக அழைக்கப்பட்டபோது, நியமிக்கப்பட்ட அதிகாரிகளில் இருவர் தகவல்களைத் தயாரித்து முடித்துவிட்டதாகவும், அவர்கள் *09.12.2022* திகதிக்குள் நான்கு *RTI* களுக்கும் பதில்களை அனுப்புவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.<br><br>*09.12.2022 – MOA* ஐ அழைக்க முயற்சித்தபோதும் பதில் கிடைக்கவில்லை.<br><br>*13.12.2022 -* பின்தொடர்வதற்காக | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | அழைத்தபோது, மேலும் ஒரு நியமிக்கப்பட்ட அதிகாரியின் தகவல் வரைவுக்காக காத்திருப்பதாக தெரிவிக்கப்பட்டது, மேலும் நான்கு *RTI* கோரிக்கைகளுக்கும் பதில்களை *14.12.2022*க்குள் தபால் மற்றும் மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைப்பதாகத் அறிவிக்கப்பட்டது.<br><br>*14.12.2022 -* பின்தொடர்வதற்காக பலமுறை அழைப்புக்களை மேற்கொண்டபோதும் கிடைக்கப்பெறவில் லை. அதன் பின்னர் நாங்கள் தொடர்பு கொள்வதை நிறுத்தினோம். | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | *26.12.2022 -* தபால் மூலம் தகவல்கள் கிடைக்கப்பெற்றன. | |
| சிறைச்சாலைகள் திணைக்களம் மற்றும் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகத்தின் பணியகத்தினால் ஆரம்பிக்கப்பட்ட விவசாய பயிர் சாகுபடி வேலைத்திட்டங்கள் | சிறைக் கைதிகளின் உழைப்புப் பங்களிப்பை நாட்டின் விவசாய வளர்ச்சிக்காகப் பெற்று, அவர்களை தேசத்தின் மனித வளமாக மாற்றும் நோக்கில், "சருசர - சிறைகளில் இருந்து பண்ணை வரை" என்ற பயிர் சாகுபடித் திட்டத்தைச் செயல்படுத்த சிறைச்சாலைகள் திணைக்களம் திட்டமிட்டுள்ளது. வெறுமனே அவர்களை சிறை அறைகளில் தங்க வைப்பதற்கு பதிலாக விவசாயத் திணைக்களத்தின் வழிகாட்டுதலின் கீழ் திறந்தவெளி சிறை முகாம்கள் மற்றும் வேலை செய்யும் சிறை முகாம்களில் அதிக விளைச்சல் தரும் பயிர்களை பயிரிடவும், அதன் மூலம் விளையும் அறுவடை கைதிகளுக்கு உணவளிக்க பயன்படுத்தப்படும் என்று | பகிரங்கப்படுத்தப்படவில்லை | வெளியிடப்படவில்லை | *04.11.2022 -* நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு *(MOJ)*, சிறைச்சாலைகள் திணைக்களம் *(DOP)* மற்றும் விவசாயத் திணைக்களம் *(DOA)* ஆகியவற்றிடம் *RTI* கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டது.<br><br>*08.11.2022 -* புனர்வாழ்வு ஆணையாளர் நாயகப் பணியகம் இந்தத் திட்டத்தைக் கையாள்வதால் *RTI* கோரிக்கை நிராகரிக்கப்படலாம் என்று *DOP* இனால் தெரிவிக்கப்பட்டது. *RTI* கோரிக்கையை புனர்வாழ்வு | நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்புச் மறுசீரமைப்பு அமைச்சு/ சிறைச்சாலைகள் திணைக்களம் மற்றும் விவசாயத் திணைக்களம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | எதிர்பார்க்கப்பட்டது. அதற்கு மேலதிகமாக, போதைக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வு வழங்குவதற்காக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகத்தால் பராமரிக்கப்படும் மூன்று புனர்வாழ்வு நிலையங்களின் கீழ் விவசாய அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேற்படி விவசாய நடவடிக்கைகளை மேலும் விரிவுபடுத்தும் வகையில் இலங்கை மகாவலி அதிகார சபைக்கும் தேசிய கால்நடை அபிவிருத்திச் சபைக்கும் சொந்தமான கிழக்கு மாகாணத்தின் கந்தகாடு மற்றும் நவசேனபுர பிரதேசங்களில் பயிரிடப்படாத *1000* ஏக்கர் காணிகளை பெற்று, சோளம் பயிரிட திட்டமிடப்பட்டது. *500* ஏக்கர் பரப்பளவைக் கொண்டு, மீதியுள்ள நிலத்தில், மறுவாழ்வு பெறுபவர்களின் உழைப்பைப் பயன்படுத்தி, அப்பகுதிக்கே | | | ஆணையாளர் நாயகப் பணியகத்திற்கு மாற்றுமாறு வெரிட்டே கோரியது.<br><br>*11.11.2022* - கோரிக்கை நிராகரிக்கப்பட்டதாகக் கூறி *DOP* இலிருந்து *09.11.2022* திகதியிடப்பட்ட கடிதம் கிடைத்தது.<br><br>*15.11.2022 - MOJ* க்கு அழைப்பு ஏற்படுத்தப்பட்டபோது *RTI* கோரிக்கை சிறைச்சாலைகள் திணைக்களத்திற்கு மாற்றப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டது. *MOJ* மாற்றல் கடிதத்தின் பிரதியை வெரிட்டேக்கு அனுப்பிவைத்தது. (இருப்பினும், *DOP* ஏற்கனவே கோரிக்கையை | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | உரித்தான தானியங்கள், காய்கறிகள் மற்றும் பழங்களை பயிரிட திட்டமிடப்பட்டது. நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட மேற்படி வேலைத்திட்டங்கள் தொடர்பான தகவல்களை அமைச்சரவையின் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. | | | மாற்றியிருப்பதால் இது தேவையற்றது.)<br><br>*16.11.2022 – DOP*க்கு அழைப்பை ஏற்படுத்தியபோது அதே நாளில் மாற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.<br><br>*22.11.2022 -* பின்தொடர்வதற்காக அழைக்கப்பட்டபோது, சிறைச்சாலைகள் திணைக்களத்திடமிருந்து *RTI* கோரிக்கையைப் பெறவில்லை என புனர்வாழ்வு ஆணையாளர் நாயகத்தின் பணியகம் குறிப்பிட்டது.<br><br>*24.11.2022 – DOP* இடமிருந்து *17.11.2022* திகதியிடப்பட்ட மாற்றல் கடிதத்தின் பிரதி கிடைக்கப்பெற்றது. | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | பணியகத்திற்கு அழைத்தபோது, *22.11.2022* ஆம் திகதி மாற்றல் கோரிக்கையைப் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. மேலும் தகவலை வரைவதற்காக சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு உள்ளகக் கோரிக்கை அனுப்பப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.<br><br>*30.11.2022 -* பணியகத்திடம் இருந்து அழைப்புக் கிடைத்தது, அதன்போது *RTI* கோரிக்கைகளை முதலில் தாக்கல் செய்த *DOP* மற்றும் *MOJ* இன் கீழ் அமைச்சரவை முன்மொழிவு இருப்பதாக தெரிவிக்கப்பட்டது. எவ்வாறாயினும், அவர்களிடம் இருக்கும் | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | பொருத்தமான தகவல்களை வழங்க பணியகம் ஒப்புக்கொண்டது.<br><br>*08.12.2022 -* பணியகத்திற்கு அழைப்பை ஏற்படுத்தியபோது, கோரப்பட்ட தகவல் *I/O* க்கு உள்ளக ரீதியாக அனுப்பப்பட்டதாகவும், சில நாட்களில் அவர் தகவலை வழங்குவார் என்றும் கூறப்பட்டது. பணியகத்திடம் இருந்து வேறு எந்தப் பதிலும் கிடைக்கவில்லை.<br><br>தகவல் கிடைக்கப்பெறவில்லை. | |
| கிடைக்கப்பெறாத நெல் விவசாய | முக்கியமாக ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் மற்றும் அதைத் | பகிரங்கப்படுத்தப்பட்டது | நிறைவேற்றப்பட்டது | *04.11.2022 -* நிதி, பொருளாதார | நிதி, பொருளா |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கடன்களை தள்ளுபடி செய்தல் | தொடர்ந்து ஏற்பட்ட கோவிட்-19 தொற்று நிலைமை காரணமாக பொருளாதார நெருக்கடி, படிப்படியாக மோசமாகி, நேரடியாகவும் மறைமுகமாகவும் ஒவ்வொரு துறையையும் கடுமையாகப் பாதித்து வருகிறது. மொத்த சனத்தொகையில் சுமார் 30% வீதமான விவசாய சமூகம் அதனைச் சமாளிக்க முடியாமல், இரசாயன உரத்திலிருந்து சேதன உரத்திற்குச் மாறுவதற்கு முடிவெடுத்ததன் மூலம் அவர்கள் எதிர்கொண்ட இன்னல்கள் தீவிரமடைந்தன. இந்நிலையில், நெல் சாகுபடிக்காக விவசாயிகள் பெற்ற கடனை அடைக்க முடியாமல், அந்த கடன்களை வங்கிகள் மீளவும் செலுத்தாத கடன்களாக வகைப்படுத்தியுள்ளன. விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பில் அரசாங்கத்தின் தலையீடு இன்றியமையாததாக | கருத்திட்டத்தின் காலக்கெடு, பௌதீக நிதி முன்னேற்றம் தொடர்பான தகவல்கள் வழங்கப்பட்டன | 21.11.2022 நிலவரப்படி, கருத்திட்டமானது அதன் இலக்கில் ஒதுக்கீடுகளை சரியான நேரத்தில் செலவழித்தது என்ற அடிப்படையில் 81.5% யும் மற்றும் மக்கள்தொகையின் இலக்கு குழுவின் அடிப்படையில் 91.2% ஐ எட்டியது.<br><br>86.3% முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளதாக மதிப்பீடு தீர்மானித்துள்ளது. | உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சிடம் RTI கோரிக்கை தாக்கல் செய்யப்பட்டது.<br><br>15.11.2022 - கோரப்பட்ட தகவலை வழங்குமாறு தெரிவிக்கும் வகையில் அமைச்சிலிருந்து அபிவிருத்தி நிதித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட மின்னஞ்சலின் பிரதி கிடைக்கப்பெற்றது.<br><br>22.11.2022 – மாற்றல் கோரிக்கை கிடைக்கப் பெற்றதாகவும், தகவல்களை விரைவில் வழங்குவதாகவும் அபிவிருத்தி நிதித் திணைக்களம் எங்களுக்குத் அறிவித்தது. | தார உறுதிப் பாடு மற்றும் தேசியக் கொள் கைகள் அமைச்சு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மாறியுள்ளது. ஏனெனில் பெரும்பாலான விவசாயிகள் அவர்களின் கடன் நிலுவை காரணமாக அடுத்த பெரும்போகத்தில் நெல் சாகுபடிக்கான கடன்களைப் பெறுவதற்குத் தகுதியற்றவர்களாக காணப்படுகின்றார்கள். இதன்படி, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் என்ற வகையில், கௌரவ பிரதமர் அவர்களால் இரண்டு ஹெக்டேர் அல்லது அதற்கும் குறைவான நிலப்பரப்பில் நெல் சாகுபடிக்காக அரசு வங்கிகளில் பெறப்பட்ட திருப்பிச் செலுத்த முடியாத கடன்களின் அடிப்படை தொகையை தள்ளுபடி செய்யபட வேண்டும் என்று முன்மொழியப்பட்டு அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டது | | | *29.11.2022 –* தகவல் வழங்குவதற்குத் தயாராக இருப்பதாக அபிவிருத்தி நிதித் திணைக்களம் வெரிட்டேக்கு அறிவித்ததுடன் தகவலின் மென் பிரதியை அதே நாளில் மின்னஞ்சல் மூலம் அனுப்பியது.<br><br>*09.12.2022 -* அஞ்சல் மூலம் வன்பிரதி கிடைத்தது. | |

VR PUBLIC FINANCE .lk

# பொறுப்புத்துறத்தல்

இந்த இணைய மேடையில் பிரசுரிக்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் அரச ஆவணங்கள், உத்தியோகபூர்வ வெளியீடுகள், பொது ஆவணங்கள் மற்றும் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு தொகுக்கப்பட்டுள்ளது. இந்த இணைய மேடையில் பிரசுரிக்கப்படும் தகவல்கள் எவையும் வெரிட்டே ரிசர்ச் நிறுவனத்தினதோ அந்நிறுவனத்தில் பணிபுரிபவர்களினதோ தனிப்பட்ட நோக்கோ கருத்துக்களோ கிடையாது. இந்த இணையமேடையில் உள்ள தகவல்களின் காரணமாக ஏற்படும் எவ்வகையான இழப்புக்கள் மற்றும் சேதங்களிற்கோ அல்லது ஏற்படலாம் என அனுமானிக்கக்கூடிய எவ்வகையான இழப்பு, சேதம் அல்லது நற்பெயரிற்கான களங்கங்களிற்கோ வெரிட்டே ரிசர்ச் நிறுவனம் பொறுப்பெடுக்காது.

இந்த இணையமேடையில் பிரசுரிக்கப்படும் தரவுகள் அனைத்தையும் நம்பகமான மூலங்களில் இருந்து பெற்றுக்கொள்வதற்கான அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டிருக்கும் அதேவேளை, அத்தரவுகளைக் கொண்டு பெற்ற பெறுபேறுகளில் காணப்படும் தவறுகள் அல்லது விடுபடல்களிற்கு வெரிட்டே ரிசர்ச் நிறுவனமோ *budgetpromises.org* குழு அங்கத்தவர்களோ பொறுப்பாக மாட்டார்கள். வெரிட்டே ரிசர்ச் நிறுவனத்தின் அனுமதியின்றி இந்த இணையமேடையில் உள்ள உள்ளடக்கங்களை வணிக நோக்கத்திற்காக திருத்தவோ, வெளியிடவோ, கைமாற்றவோ, பரவலாக்கவோ, விற்பனை செய்யவோ, மீள்பதிக்கவோ, இதனைத் தழுவி புதிய உள்ளடக்கங்களை உருவாக்கவோ, பகிர்ந்தளிக்கவோ, மீள்இடுகையிடவோ அல்லது காட்சிப்படுத்தவோ எவரிற்கும் அனுமதியில்லை. அத்துடன் வெரிட்டே ரிசர்ச் நிறுவனத்தின் முன் அனுமதியின்றியோ, முன் அனுமதியுடனோ இந்த இணையமேடையில் உள்ள தரவுகளைக் கொண்டு மீள்உருவாக்கப்படும் எவ்வகையான வெளியீடுகளிற்கும் *budgetpromises.org* குழு பொறுப்பெடுக்காது.

*budgetpromises.org* எவ்விதமான அரசியல் கட்சிகளை பிரதிநிதிப்படுத்துவதோ, ஆதரிப்பதோ, ஒப்புதல் வழங்குவதோ அல்லது எவ்விதமான அரசியற் கட்சிகளுடனோ அரசியலுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களினுடனோ தொடர்புபட்டது அல்ல. அத்துடன் எமது பகுப்பாய்வுகள் அனைத்தும் புள்ளிவிபரங்களை மாத்திரம் அடிப்படையாகக் கொண்ட அனுமானங்கள் ஆகும்.

இந்த இணையமேடையில் உள்ள அனைத்து தரவுகளும் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் எவ்வித கட்டணங்களும் இன்றி வழங்கப்படுகின்றது. இத்தரவுகளைப் பாவிப்பதற்கு பாவனையாளர் மற்றும் வெரிட்டே ரிசர்ச் அல்லது *budgetpromises.org* குழுவினரிற்கும் இடையில் எவ்வித ஒப்பந்தங்களோ, புரிந்துணர்வுகளோ கிடையாது.

இந்த இணையமேடை இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தரவுகளின் போக்கினை குறித்துக்காட்டுவதற்காக, *budgetpromises.org* இனால் சுயாதீனமாக தயாரிக்கப்பட்ட பல பகுப்பாய்வுகளையும்

உள்ளடக்கியுள்ளது. இப்பகுப்பாய்வுகளை மீள் உருவாக்கம் செய்யும் முன் வெரிட்டே ரிசர்ச் நிறுவனத்தின் அனுமதியைப் பெறுவது கட்டாயமாகும்.